சுற்றறிக்கை இலக்கம் : 04/2025

எனது இலக்கம் : எச்ஏ/1/2/2022
பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும்
உள்ளூராட்சி அமைச்சுசுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07

2025.04.29

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள்
மாவட்டச் செயலாளர்கள் / அரசாங்க அதிபர்கள்
திணைக்களத் தலைவர்கள்
கூட்டுத்தாபன மற்றும் நியதிச் சட்ட மன்ற தலைவர்கள்
பிரதேச செயலாளர்கள்

**அரச வெசக் பண்டிகையைக் கொண்டாடுதல் – ஸ்ரீ புத்தர் ஆண்டு 2569**

1. கௌத்தம புத்தரின் முக்கிய மூன்று நிகழ்வுகளை நினைவுகூறும் வகையில் நடாத்தப்படும் வெசக் பண்டிகையை முன்னிட்டு 2025 ஆம் ஆண்டு மே மாதம் 10 ஆந் திகதி முதல் மே மாதம் 16 ஆந் திகதி வரையில் "வெசக் வாரம்" ஆக அபம/25/069/822/015 மற்றும் 2025.04.28 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் அரசினால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

2. அதன்படி, அகில இலங்கை சாசன பாதுகாப்புச் சபையின் வழிகாட்டலின்படி, புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு மற்றும் பௌத்த அலுவல்கள் திணைக்களம், மாவட்ட செயலகங்கள் மற்றும் பிரதேச செயலகங்கள் உள்ளிட்ட அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் ஆதரவுடன் வெசக் பண்டிகையை மிகச் சிறப்பான முறையில் நாடளாவிய ரீதியில் நடாத்துவதற்கு அனைத்து நடவடிக்கைகளும் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன.

   இவ்வருடம் அரச வெசக் பண்டிகையின் தொனிப்பொருளாக அமைவது,

   "பஜெத மித்தே கல்யாணே – பஜெத புரிசுத்தமே" ஆகும்
   (நல்ல குணங்களைக் கொண்ட உன்னத நண்பர்களுடன் பழகுவோம்)

3. கௌத்தம புத்தரின் முக்கிய மூன்று நிகழ்வுகளையும் நினைவுகூறுகின்ற கொண்டாட்டத்தை முன்னிட்டு 2025 மே மாதம் 10 ஆந் திகதி முதல் மே மாதம் 16 ஆந் திகதி வரை வெசக் வாரமாக பிரகடனப்படுத்தப்பட்டு சகல அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் மற்றும் வீடுகளில் பௌத்த கொடியை ஏற்றி வைப்பதற்கும் அக்கட்டிடங்களை சூழல் நட்புறவுடன் கூடியதாக வெசக் அலங்காரங்களைக் கொண்டு மெருகூட்டுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

4. ஶ்ரீ புத்தர் வருடம் 2569 ஆவது அரச வெசக் விழா, 2025 ஆம் ஆண்டு மே மாதம் 10 ஆந் திகதியன்று நுவரெலியா மாவட்டத்தில் உள்ள நுவரெலியா சர்வதேச பௌத்த மைய விகாரையில் நடாத்தப்படும் என்பதோடு அதற்கு இணையாக, வெசக் வாரத்தில் நாட்டின் அனைத்து விகாரைகளையும் மையப்படுத்தி ஆன்மீக வளர்ச்சிக்கு முதலிடத்தை வழங்கி அர்த்தமுள்ள மற்றும் பயனுள்ள நிகழ்ச்சித்திட்டங்களைச் செயல்படுத்துவதற்கும் எதிர்பார்க்கப்படுகிறது. நாடு முழுவதிலும் உள்ள அனைத்து விகாரைகள், அறநெறிப் பாடசாலைகள், பாடசாலைகள், அரச மற்றும் அரச சார்பு நிறுவனங்களுடன் பிரதேச மற்றும் மாவட்ட சாசனப் பாதுகாப்புச் சபைகளின் முழுமையான வழிகாட்டலுடன் வெசக் வாரத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு முன்மொழியப்பட்டுள்ள பின்வரும் பணிகளை நிறைவேற்றுவதற்குத் தேவையான ஏற்பாடுகளைச் செய்தல் வேண்டும்.

**வெசாக் வாரத்தினுள் செயல்படுத்துவதற்கு முன்மொழியப்பட்டுள்ள நிகழ்ச்சித்திட்டங்கள்**

**I. 2025.05.10 ஆம் திகதிக்கு அரச வெசக் கொண்டாட்டம் மற்றும் அதனுடன் இணைந்ததாக நாடு முழுவதும் நடைபெறும் வெசாக் நிகழ்ச்சிகளின் தொடக்கம்**

நுவரெலியா மாவட்டத்தில் நடாத்தப்படுகின்ற அரச வெசக் கொண்டாட்டத்துடன் இணைந்து, நாடு பூராகவும் உள்ள மாவட்ட மட்டத்திலும், பிரதேச செயலகப் பிரிவு மட்டத்திலும் வெசாக் தொடக்க நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துதல்.

**II. 2025.05.11 ஆந் திகதிக்கு "Clean Sri Lanka" நிகழ்ச்சித்திட்டத்திற்கு இணையாக சுற்றுச்சூழல் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் சிரமதானங்களை ஏற்பாடு செய்தல்**

கௌதம புத்தரின் போதனைகளின் அடிப்படையில் சுற்றுச்சூழலுடன் நட்புறவு கொண்ட குடிமக்களை உருவாக்குவதற்காக பௌத்த சமயம் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்த சொற்பொழிவுகள் மற்றும் செயலமர்வுகளை நடத்துதல், பௌத்த விகாரைகள், பாடசாலைகள், பொது இடங்கள், அலுவலகங்கள், வீடுகள் போன்றவற்றை சுத்தம் செய்தல், முதியோர் மற்றும் சிறுவர் இல்லங்கள் மற்றும் மருத்துவமனைகள் போன்ற பொது இடங்களில் சிரமதானங்களை நடத்துதல், மரம்

நடும் திட்டங்களை செயல்படுத்துதல் மற்றும் மூலிகைத் தோட்டங்கள்/வனத் தோட்டங்களை உருவாக்குகின்ற நிகழ்ச்சித்திட்டங்களையும் செயற்படுத்துதல்.

**III. 2025.05.12 ஆந் திகதிக்கு சீல பாவனா பின்கம் ( வெசாக் போயா தின நிகழ்ச்சி)**

இந்த நாள் வெசாக் பௌர்ணமி போயா தினம் என்பதால், அனைத்து விகாரைகளிலும் சீல பாவனா பின்கம்களை நடத்துதல் மற்றும் இந்த பின்கம்களில் அறநெறிப் பாடசாலைகள், பாடசாலை மாணவர்கள் மற்றும் இளைஞர்களை இந்த சடங்குகளில் ஈடுபடுத்துதல், அந் நாளை இசைக் கச்சேரிகள் மற்றும் விழாக்களுக்கான நாளாக மாற்றாதிருத்தல் வேண்டும் என்பதோடு, கௌதம புத்தரின் முக்கிய மூன்று நிகழ்ச்சிகளையும் நினைவுகூர்ந்து கொள்கை ரீதியான பூஜைகளை நடாத்துகின்ற முழுமையான பௌத்தம் சார்ந்த ஒரு நாளாக கொண்டாடும் வகையில் மக்களுக்கு விழிப்பூட்டுதல்.

**IV. 2025.05.13 ஆந் திகதிக்கு நன்நெறி மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்கள்**

பாடசாலைகள் மற்றும் அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கு போதைப்பொருள் தடுப்புத் திட்டங்களை நடத்துதல், ஹெல பௌத்த பழக்கவழக்கங்களின் மதிப்பு குறித்து இளைஞர் சமூகத்திற்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் ஆலோசனை நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துதல், நன்நெறி ஊர்வலங்களை நடத்துதல் மற்றும் முதியோர் மற்றும் சிறுவர் இல்லங்கள் மற்றும் மருத்துவமனைகள் போன்ற இடங்களில் உபசரிப்பு நிகழ்ச்சிகளை நடத்துதல்.

**V. 2025.05.14 ஆந் திகதிக்கு பிக்குகள் மற்றும் சில்மாதா பயிற்சித் திட்டங்கள்**

பிரிவெனாக்களில் கல்வி நடவடிக்கைகளை தொடர்கின்ற பிக்குமார்களுக்கு இயலளவு விருத்திப் பயிற்சித் திட்டங்களை நடாத்துதல், பிரிவெனாக்களில் கல்வி கற்கின்ற மாவட்டத்தில் உள்ள அடிப்படை வசதி வாய்ப்புக்கள் இல்லாது சிரமப்படுகின்ற பிக்குகளுக்கு அப்பிரதேசத்தில் உள்ள வளவாளர்களை இனங்கண்டு, அவர்களுக்குத் தேவையான வசதி வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்தல்.

**VI. 2025.05.15 ஆந் திகதிக்கு ஆன்மீக விருத்தி நிகழ்ச்சிகள்**

மக்களின் ஆன்மீக விருத்தியை மேம்படுத்துவதற்காக பௌத்த விகாரைகளை மையமாகக் கொண்டு தர்ம பிரசங்கங்கள், மதக் கலந்துரையாடல்கள் மற்றும் தியான நிகழ்ச்சிகளை நடத்துதல். பௌத்த பழக்கவழக்கங்கள் மற்றும் சடங்குகள் சம்பிரதாயங்கள் குறித்து அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கும், இளம் வயதினர்களுக்கும் விழிப்பூட்டல் நிகழ்ச்சிகளைச் செய்தல்.

VII. **2025.05.16 ஆந் திகதிக்கு 'சில் வாசனை – ஹெல வாழ்க்கை' ஆரோக்கியமான வாழ்க்கைக்கு**

**புத்தரின் போதனைகளின் படி நடத்தப்படும் நிகழ்ச்சிகள்**

இலவச மருத்துவ பிணியாய்வு நிகழ்ச்சித்திட்டங்களை ஏற்பாடு செய்தல், இரத்த தான திட்டங்கள், கண் பரிசோதனைகள் போன்றவற்றை ஏற்பாடு செய்தல், கண் தானம் செய்தல் மற்றும் உறுப்பு தானத்திற்கான பதிவுத் திட்டங்களை ஏற்பாடு செய்தல், பிரதான நிகழ்ச்சித்திட்டத்துடன் இணைந்ததாக பிரதேச செயலகப் பிரிவுகள் / சுகாதார மருத்துவ உத்தியோகத்தர் பிரிவுகளை உள்ளடக்கும் வகையில் பிரதேசத்தில் கிடைக்கும் வளங்களுக்கு ஏற்ப திட்டங்களை செயல்படுத்துதல்.

**05.** 2025.05.12, 13 மற்றும் 14 ஆகிய 03 நாட்களில், நாடு பூராகவும் உள்ள அனைத்து கால்நடை அறுப்பு நிலையங்கள், பல்பொருள் அங்காடி விற்பனைக்கூடங்கள் உள்ளிட்ட அனைத்து இறைச்சி விற்பனை சார்ந்த கடைகளையும் மூடுவதற்கும், நாடு பூராகவும் உள்ள அனைத்து மதுபானக் கடைகள், மதுபான விற்பனை நிலையங்கள் மற்றும் விடுதிகளையும் மூடுவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

மேற்கூறிய விடயங்களில் கவனம் செலுத்தி, வெசக் பண்டிகையை கொண்டாடும் போது பௌத்த சமய ஒழுங்குகளையும் நெறிமுறைகளையும் பேணி நடக்கின்ற சிறந்ததொரு சமூகத்தைக் கட்டியெழுப்புவதற்காக இதனுடன் தொடர்புடைய அனைத்து தரப்பினருக்கும் தேவையான ஆலோசனைகளையும் வழிகாட்டுதல்களையும் வழங்குவதன் மூலமும், வெசக் வாரத்தில் ஒவ்வொரு பௌத்த விகாரைகளையும் மையமாகக் கொண்ட அர்த்தமுள்ள மற்றும் பயனுறுதி மிக்க திட்டங்களை செயல்படுத்துவதன் மூலமும், பௌத்த விழுமியங்களால் வளர்க்கப்பட்ட ஒரு ஒழுக்கமான சமூகத்தை கட்டியெழுப்புவதற்கு அனைவரும் பங்களிப்புச் செய்தல் வேண்டும்.

ஒப்பம்./ எஸ். ஆலோகபண்டார
செயலாளர்
பொது நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

பிரதிகள் :

01. அதி வணக்கத்திற்குரிய மகாநாயக்க தேரர் அவர்களுக்கு – கௌவத்துடன் அறிந்து கொள்ள

02. மதிப்பிற்குரிய தலைவர் / மதிப்பிற்குரிய செயலாளர் தேரர் அவர்களுக்கு,
அகில இலங்கை சாசனப் பாதுகாப்புச் சபை – கௌவத்துடன் அறிந்து கொள்வதற்காக

03. ஜனாதிபதிச் செயலாளர் – தய. அறிந்து கொள்ளவும், அவசியப்படும் நடவடிக்கைக்காகவும்

04. பிரதமரின் செயலாளர் – தய. அறிந்து கொள்ளவும், அவசியப்படும் நடவடிக்கைக்காகவும்

05. செயலாளர், புத்தசான, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு.